(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

# C.C.1/2018

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW.1 Page.No.26/2016

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஜீ.கண்ணன் | ஜாதி | இந்து |
| தகப்பனார் பெயர் | கெங்காதரன் | தொழில் | வனவர் |
| கிராமம் | கணியம்பாடி | மதம் | இந்து |
| தாலுக்கா | வேலூர் | வயது | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 18.02.19

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முன் விசாரணை:-

நான் தற்போது வேலூர் வனச்சரகம், லத்தேரி பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2016-ம் தேதி விடியற்காலை சுமார் 4 மணியளவில் சந்தன மரம் வெட்டுவதாக எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும், என்னுடன் கேசவன் வனக்காப்பாளர் மற்றும் ஏழுமலை வனக்காவலர் முவரும் அடுக்கம்பாறை அடுத்த கொல்லமேடு கிராமத்தில் சந்திரா க/பெ மூர்த்தி என்பவரது பட்டா நிலத்தில் சேட்டு என்பவர் இரண்டு சந்தனமரத்துண்டுகளை வாளால் அறுத்து திருடிச்செல்ல எடுத்து வைத்திருக்கும்போது நாங்கள் அவரை காலை சுமார் 4.30 மணியளவில் பிடித்து விசாரித்தப்போது அவர் பாஸ்கர் என்பவருடன் சேர்ந்து சந்தன மரங்களை அறுத்ததாக தெரிவித்தார். பாஸ்கர் தப்பியோடிவிட்டதாக தெரிவித்தார். அவர் கூறிய வாக்குமுலத்தின்பேரில் சுமார் காலை 6 மணியவில் அவரிடம் ஒப்புதல் வாக்குமுலம் நான் பதிவு செய்தேன். சம்பவயிடத்திலேயே நான் அரசு தரப்பு மகசர் சுமார் காலை 5.30 மணியளவில் தயார் செய்தேன். கேசவன் வனக்காப்பாளர் சம்பவயிடத்திலேயே எச்.நமுனா சுமார் 5 மணியளவில் தயார் செய்தார். ஏழுமலை வனக்காவலர் சந்தன மரத்துண்டுகளுக்கு அளவுகள் கொடுத்தார். எதிரி சேட்டு கொடுத்த வாக்குமுலத்தின்படி அவர் மீது வழக்கு பதிவு செய்தேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் எதிரியை வேலூர் வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து சென்று உதவி வனப்பாதுகாப்பாளர் அவர்களிடம் சி.பி.எண் பெற்று எதிரியை வேலூர் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தேன். பிடிப்பட்ட பொருட்களை வேலூர் வனச்சரக அலுவலகத்தில் பாதுகாப்பு கருதி வைக்கப்பட்டது.

**புகார் தாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

1. எச்.படிவம் **பு.த.சா.ஆ.1**
2. சேட்டு என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் **பு.த.சா.ஆ.2**
3. அரசு தரப்பு மகசர் **பு.த.சா.ஆ.3**
4. மாதிரி வரைபடம் **பு.த.சா.ஆ.4**
5. படிவம் 95 - **பு.த.சா.ஆ.5**
6. அ.படிவம் **பு.த.சா.ஆ.6**
7. படிவம்.சி **பு.த.சா.ஆ.7**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

**C.C.22/2013**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW.10 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கே.பி.பன்னீர்செல்வம் | ஜாதி | இந்து |
| தகப்பனார் பெயர் | கே.ஏ.பிச்சாண்டி | தொழில் | துணை வனப்பாதுகாவலர் (ஓய்வு ) |
| கிராமம் | வேலூார் | மதம் | இந்து |
| தாலுக்கா | வேலூார் | வயது | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 15.02.19

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முன் விசாரணை:-

நான் தற்போது செங்கம் வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 27.12.1998-ம் வருடம் வனவர் சிகாமணி அவர்களது தலைமையில் தகரகுப்பம் பீட் இன்னர்ஜவ்வாது காப்புகாடு கிளையூர் - பழையபாளையம் வழி சராகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட செங்கம் சந்தன மரக் குற்ற வழக்கு எண் 34/98 க்கு தொடர்புடைய ஆவணங்களை பரிசீலனை செய்து

வழக்கிற்கான இறுதி குற்றப்பத்திரிக்கை மற்றும் அ.படிவத்தினை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் அ.படிவம் தயார் செய்தேன் என்றால் சரி. தணிக்கைக்கு செல்வதற்கான ஜீப்பின் லாக்புக்கை தாக்கல் செய்யவில்லை. ஜீப் ஓட்டுனர் மற்றும் சாட்சிகளை நான் விசாரித்து அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை.சம்பவம் காப்புக்காடான பகுதியா என்பதை உறுதிப்படுத்துவதற்கு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரைபடத்தில் உள்ள விவரங்கள் தெளிவாக தெரியவில்லை என்றால் சரிதான். நான் புலன் விசாரணை செய்யாமல் அ.படிவத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

08.02.2019

சி.சி. 75/2011 ப.எண். 18/2017

அ.த.சா.1 பொன்னுராஜ், த/பெ பொன்னன்

சாட்சி மனுவின் பேரில் ஆஜர் சத்தியப்பிரமாணம் பெறப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டாா.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கின் சங்கதிகள் அனைத்தும் நேரிடையாக தெரியும். ரிமாண்டு ரிப்போர்ட், சம்பவயிட வரைபடம், 16 அரசிதழ் அறிக்கை ஆகியவற்றை நான் தயார் செய்தேன். ஏ படிவம் தாக்கல் செய்வதற்குள் நான் பணிமாறுதலாகிவிட்டேன். வழக்குச் சொத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அங்கீகாரம் பெற்ற அரசு அலுவலரிடம் ஒப்படைத்தேன். பறிமுதல் செய்யப்பட்ட வழக்குச் சொத்துக்கள் என்ன ஆனது என்பது பற்றிய விவரத்தை சி-படிவத்தில் சரிவர குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எச்.படிவத்தில் யாரிடமிருந்து என்னென்ன கட்டைகள் எடுத்துவந்தார்கள் என்று குறிப்பிட்டு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யார் யார் குறிப்பாக எவ்வளவு எடை கொண்ட கட்டைகளை சுமந்து வந்தார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. 6 எதிரிகள் 6 கட்டைகளை எடுத்துவந்ததாக ரிமாண்ட் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்

என்றால் சரிதான். ஒவ்வொருவரும் எவ்வளவு எடை கொண்ட கட்டைகளை எடுத்து வந்தார்கள் என்று நான் குறிப்பிடவில்லை. மொத்தமாக எவ்வளவு எடை உள்ளது என்று தான் குறிப்பிட்டுள்ளேன். அப்சர்வேட்டரி என்பது ஆள் நடமாட்டம் உள்ள போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். தப்பிஓடிய எதிரிகளை பிடிக்க முயற்சித்தோம். நான் எந்த எதிரியையும் பிடிக்கவில்லை. எதிரியிடம் வாக்குமுலம் நான் வாங்கவில்லை. எனக்கு எச்.படிவம் உள்ளது. நான் சம்பவயிடத்திற்கு செல்லும்போது ஆலங்காயம் வனச்சரக எச் படிவத்தை எடுத்து செல்லவில்லை. பிடிபட்ட எதிரிகளின் வாக்குமுலத்தின் அடிப்படையில் தப்பிய நபர்கள் குறித்து தெரிவித்தார். தப்பிஓடிய எதிரிகளை ரவிச்சந்திரன் துரத்திச்சென்று அடையாளம் கண்டு திரும்பியுள்ளார் என்று அ படிவத்தில் கண்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நான் எதிரிகளிடம் வாக்குமுலம் பெற்றப்பின்னர் 8 மணிக்கு கைது செய்தேன். நான் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், அனைத்து ஆவணங்களையும் அலுவலகத்திலேயே வைத்து தயாரித்தோம் என்றும் வாக்குமுலங்களை நாங்களே தயாரித்து எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் இருந்த கட்டைகளை வைத்து எதிரி மீது ஒரு வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றாால் சரியல்ல. எதிரி காப்புக்காட்டிற்குள் நுழையவும் இல்லை என்றும் எதிரியிடம் எந்தவித கட்டையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றிய



கட்டைகள் சந்தனக்கட்டைகளே இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சந்தனகட்டைகளை கைப்பற்றியிருந்தால் மாவட்ட வன அலுவலரிடம் சமர்த்திருப்போம் என்றும் அந்த கட்டைக்ள அரசுக்கு பறிமுதல் செய்வதற்கு முன் எதிரிக்கு அறிக்கையும், பறிமுதல் உத்தரவையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் இதுவரையில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு முடிந்தால் தான் தாக்கல் செய்வோம். இவ்வழக்கு எதிரி மீது போடப்பட்ட வழக்கு. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தசம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

04.02.2019

சி.சி. 2/2018 ப.எண். 23/16

அ.த.சா.1ஏ.சஞ்சீவி த/பெ ஆஞ்சநேயன்

சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் பெறப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டாா.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

2-ம் எதிரியை இவ்வழக்கில் குற்றவாளியாக எவ்வாறு சேர்த்தீர்கள் என்றால் சம்பவசமயத்தில் ஆஜர் எதிரி எங்கள் முன்னர்தான் தப்பித்து ஓடினார் அவர் பெயர் மற்றும் விலாசங்களை பிடிப்பட்ட 1-ம எதிரி தெரிவித்தார். 2-ம் எதிரி இந்த நீதிமன்றத்தில் அழைப்பாணையின் முலம் ஆஜரானார் என்றால் சரிதான். அழைப்பாணை சார்வு செய்யப்படும் வரை அவர் ஊரில்தான் இருந்தார் என்றால் இரண்டுமுறை தேடும்போது அவர் கிடைக்கவில்லை. இறுதியாக வழக்கின் சம்மனை சார்

வு செய்யும் சமயத்தில் தான் இருந்தார். சம்மன் சார்வு செய்வதற்கு முன்பாக ஆஜர் எதிரி ஊரிலேயேதான் இருந்தார் என்றும் அவரை கைதுசெய்வதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1-ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை நான்தான் வாங்கினேன். ஒப்புதல் வாக்குமூலம வாங்கிய பின்னர்தான் கைது செய்தோம். காலை 8.40 மணியளவில் எதிரியை கைதுசெய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை 10 அல்லது 15 நிமிடங்கள் பதிவு செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்கள் விவரம் குறித்தும் அதன் மதிப்பு மற்றும் அளவுகள் குறித்தும் குறிப்பிட்டு எழுதியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து என்னென்ன பொருட்கள் எவ்வளவு பொருட்கள் கைப்பற்றினோம் என்று நிருபிப்பதற்கு எதாவது ஆவணத்தில் எதிரியிடம் கையெழுத்து பெற்றீர்களா என்றால் இல்லை. நாங்கள் 1-ம் எதிரியிடமிருந்து எந்தப்பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக 3 நபராக யார் கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. மொத்தம் 4 நபர்கள் கையொப்பம் செய்தோம். 3-வதாக கையொப்பம் செய்த நபரின் வரிசை எண் ஞாபகமில்லை. அதேப்போல் 1,2,4 வரிசையில் யார் யார் கையெழுத்துப்போட்டார்கள் என்று முறைப்படி வரிசை நினைவில்லை பெயர் தெரியும். ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டது ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்றஎண் குறிப்பிடபட்டிருக்காது. ஒப்புதல் வாக்குமூலத்தை 8.30 மணிக்கு ஆரம்பித்து 8.40 மணிக்கு முடித்துவிட்டோம். ரெய்டிற்கு செல்வதற்காக காலை 7.30 மணிக்கு அலுவலகத்தில் சேர்ந்தோம். சம்பவயிடத்திற்கு 10 நிமிடத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்கள் அலுவலகம் ஆலங்காயத்தில் உள்ளது. காவலூார் வனஓய்வு விடுதியில் இருந்துதான் கண்காணிப்பிற்கு சென்றோம். சம்பவயிடத்தில் மக்கள்



குடியிருப்புக்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் 50 வீடுகள் இருக்கும். ஆலங்காய வனச்சரக அலுவலக ஆமர்மார்க் குறியீடு செய்யப்பட்டது. 2-ம் எதிரியை தயானிதி வனக்காப்பாளர் மற்றும் சிவக்குமார் வனக்காவலர் துரத்திச்சென்றனர் எதிரி தப்பித்து ஓடும்போது 2-ம் எதிரி சட்டை மற்றும் அரைக்கால் சட்டை அணிந்திருந்தார் எதிரி அணிந்திருந்த உடையின் நிறம் நினைவில்லை. 1-ம எதிரி என்ன உடை அணிந்திருந்தார் என்றால் சிவப்பு நிற டீ ஷர்ட் மற்றும் லுங்கி அணிந்திருந்தார். பொருட்கள் கைப்பற்றும்போது கைப்பற்றப்பட்ட வெட்டுக்கத்தியின் மதிப்பு ருபாய் 10 இருக்கும் கைப்படி வாளின் மதிப்பு எவ்வளவு என்று தற்போது நினைவில்லை. வெட்டுக்கத்தியின் கைப்பிடி மூங்கிலால் ஆனது கைவாள்னுடைய கைப்பிடி பிளாஸ்டிக்கினால் ஆனது. அதன் நீளம் அகலம் அளந்து எழுதினோம் தற்போது நினைவில்லை. அவ்வாறே வெட்டுக்கத்தியின் நீளமும், அகலமும் அளந்து எழுதினோம்

தற்போது நினைவில்லை. நாங்கள் மொத்தம் ரெய்டிற்கு இரண்டு வாகனங்களில் 5 வன அதிகாரிகள் சென்றோம். என்னுடைய இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றோம். அவ்வாறு 3 நபர்கள் சென்றது தவறு என்றால் சரிதான். எதிரியை பிடித்து வரும்போது சேகர் வனக்காப்பாளர் வாகனத்தில் சேகர், எதிரி, மற்றும் சிவக்குமார் ஆகியோர் வந்தனர். இருசக்கர வாகனத்தில் 3 நபர் செல்வது சட்டப்படி தவறு என்றால் சரிதான் எதிரியை அழைத்துவரவேண்டும் என்ற எண்ணத்தில் அழைத்து வந்தோம். எனது இருசக்கர வாகனத்தின் பதிவெண் டி.என். 23 பி டி 5764 ஈரோஹோண்டா. சேகருடைய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு நினைவில்லை. ரெய்டுக்காக எங்கள் வாகனத்தை எடுத்து செல்வதற்காக எங்கள் அலுவலகத்தில் குறிப்புக்கள் எழுதிவைக்கவில்லை சொந்த வண்டி என்பதால் எழுதிவைக்கவில்லை. 1-ம் எதிரி ஓட்டுனர் என்று விசாரித்தீர்களா என்றால் நான் விசாரிக்கும்போது கூலி வேலை செய்வதாக சொன்னார். அவர் லாரி ஓட்டுனர் என்றும் ஓட்டுனர் உரிமத்தை நாங்கள் தான் வாங்கிவைத்திருக்கிறோம் என்றால் சரியலல. எங்கள் அலுவலகத்திற்கு 1-ம் எதிரி பலமுறை வாகனம் ஓட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்ததில் 1-ம் எதிரி பலமுறை கூலி பெற்றுக்கொண்டு வாகனம் ஓட்டியுள்ளார் என்றால் சரியல்ல தவறு. வழக்குச் சொத்தில் 3-வது அயிட்டச் சொத்தின் எடை எவ்வளவு என்றால் குறிப்பாக தெரியாது மொத்த எடை 9 கிலோ 1-ம் அயிட்டச் சொத்தின் எடை எவ்வளவு என்று தற்போது ஞாபகமில்லை. 3 துண்டுகள் வாளால் அறுக்கப்பட்டிருந்தது அனைத்தும் பச்சைமரத்துண்டுகள் என்றால் சரிதான். பிளாஸ்டிக் கவரில் வேர் துண்டுகள் இருந்தது அதில் காய்ந்த துண்டுகள் இருந்தது. நாங்கள் பச்சைமரத்துண்டுகளைதான் எடைப்போட்டோம். பச்சைமரத்துண்டுகள் காய்ந்தால் 3 கிலோ குறைய வாய்ப்புண்டா என்றால் 1 கிலோ குறைய வாய்ப்புண்டு. மரத்தை வெட்டிய இடத்தை நாங்கள் சென்றுப்



பார்த்தோம். மரத்தை வெட்டிய இடத்தை வரைபடத்தில் குறிப்பிடவில்லை. வெட்டிய இடத்திலிருந்து 20 மீட்டர் தொலைவில் செதுக்கிய இடத்தை குறிப்பிட்டுள்ளோம்.

வெட்டிய மரத்தில் பூமியிலிருந்து சுமார் 10 செ.மீ விட்டு வெட்டியிருந்தார்கள். பிளாஸ்டிக் கவரில் சின்னசின்ன வேர்துண்டுகள் இருந்தது. வெட்டிய மரத்தின் கிளைகளை நாங்கள் எதுவும் அலுவலகத்திற்கு எடுத்து வரவில்லை. வெட்டிய துண்டுகளின் மொத்த நீளமே தோராயமாக 130.செ.மீ மரம் தான் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளோம். 2-ம எதிரி என்ன வேலை செய்து வந்தார் என்று கேட்டு தெரிந்துக்கொண்டீர்களா என்றால் கூலி வேலை செய்வதாக ஊரில் 1-ம் எதிரியின் அண்ணன் ராஜேந்திரனிடம் கேட்டுத் தெரிந்துக்கொண்டோம். 2-ம் எதிரி எங்கள் அலுவலகத்தில் கூலி வேலைக்காக வந்திருக்கிறாரா என்றால் வரவில்லை. எதிரிகள் கூலி வேலைக்காக எங்கள்

அலுவலகத்திற்கு நாங்கள் அழைக்கும்போது வருவார்கள் என்றும் அவ்வாறு எதிரிகள் வராததால் அவர்கள் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வரைபடத்தில் பச்சை நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இடம் காப்புக்காட்டின் எல்லைப்பகுதி. நான் சொல்லும் சம்பவயிடமே காப்புகாடு இல்லை என்றால் சரியல்ல. குறைந்த அளவு எடைகொண்ட பிடிப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டிய அவசியமே இல்லை அதனால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அவ்வாறே கத்தி மற்றும் வாளையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. சம்பவயிடம் என்று காட்டப்படும் இடத்திற்கு அருகில் வழி உள்ளது. சம்பவநேரம் காலை 8.30 மணி அந்த இடத்தில் பொதுமக்கள் யாருமில்லாததால் அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் போடவில்லை. சொத்து விவரப்பட்டியலை தயாநிதி வனக்காப்பாளர் தயார் செய்தார். ஆமர்மார்க் சேகர் வனக்காபாப்பாளர் போட்டார். வரைபடத்தை நான் தயார் செய்தேன். நான் சொல்வதுப்போல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றும் வீட்டில் இருந்த நபர்களை அழைத்து வந்து அவர்கள் மீது ஒரு பொய்யான வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமே இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் நீளம், அகலம் தற்போது நினைவில்லை. என்னுடைய இருசக்கர வாகனத்தில் நான், தயாநிதி, நாராயணன் ஆகியோர் சம்பவயிடத்திற்கு வந்தோம். ரெய்டு செல்வதற்கு முன்னர் எங்கள் அலுவலகத்தில் குறிப்பு எதுவும் எழுதவில்லை.

மறு விசாரணை: இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

## Case No C.C.4/2003

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 2 Page.No.16/2015

| | | | |
|---|---|---|---|
| Name : | கே.எம். சின்னராசு | Caste : | இந்து |
| Father's Name: | மாரிநாயுடு | Calling: | வனவர் |
| Village: | அரூர் | Religion: | இந்து |
| Taluk: | அரூர் | Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated : 18.12.2018

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.
முன் விசாரணை:-

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சமுகநலகாடுகள் மற்றம் விளம்பர வனச்சரக அலுவலகம் அரூரில் வனவராக தற்போது பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 17.4.1998-ம் தேதி மாவட்ட வனஅலுவலர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் திருப்பத்துார் வட்டம் உதவி வனபாதுகாவலர் து.னா.அம்பலத்தரசர் அவர்களின் உத்தரவின் பேரில் சோதனைவாரண்ட் வனச்சரக அலுவலர் திருப்பத்துார் ராஜ்மோகன் அவர்கள் தலைமையில் மாணிக்கம் வனவர் சுந்தரமுர்த்தி வனக்காப்பாளர், மனோகரன் வனக்காப்பாளர், புஷ்பராஜ் வனக்காப்பாளர், தங்கவேல் வனக்காப்பாளர், கணேசன் வனக்காவலர், சண்முகம் வனக்காவலர், மற்றும் நான் ஆகிய 9 பேர் அடங்கிய குழுவுடன் மாலை சுமார் 4 மணிக்கு புறப்பட்டு ஜோலார்பேட்டை வழியாக வாணியம்பாடி காதர்பேட்டை ஆசிரியர் நகர் காலணி அருகே சுமார் மாலை 5.15 மணிக்கு சேர்ந்தோம். 71ஏ எண்ணுள்ள வீட்டில் வனச்சரகர் தலைமையில் சர்ச் வாரண்டுடன் வீட்டை சோதனை செய்ய வீட்டில் இருந்தவர்களிடம் தகவல் பெற்று வீட்டில்

சோதனை செய்தோம். இரண்டு நபர்கள் வீட்டின் பின்புறம் சுவர் ஏறி குதித்து தப்பிஓடினார்கள். வீட்டில் ' இரண்டு பெண், ஒரு ஆண் இருந்தனர். இவர்கள் முன்னிலையில் வீட்டை சோதனை செய்துப்பார்த்தோம். சாக்குபைகளால் கட்டப்பட்ட மூட்டைகள் இருந்ததை பார்த்து அந்தப் பைகளை பிரித்து சோதனைசெய்ததில் வாசமுள்ள சிறுசிறு சந்தனதுண்டுகள் இருந்தன. முட்டைகளை 1 முதல் 7 வரையில் கறுப்பு பெயிண்டினால் வரிசை எண் கொடுத்து மூட்டைகளை எடுத்து வைக்கும்போதே

எடைபோடும் தட்டு (pring rothal) ஒன்று இருந்தது.வீட்டின் பின்புறம் கிளிப்பச்சை நிறமுள்ள அம்பாசிடர் கார் எம்.இ.ஆர்.2100 எண் கொண்ட காரை சோதனை செய்தப்போது காரின் பின்புறம் 3 கோணிப்பை முட்டைகள் இருந்ததை பிரித்துப்



பார்த்தப்போது சிறுசிறு சந்தன மரங்கள் இருந்தது தெரியவந்தது. பிரித்த எடுத்த கட்டைகளை கோணிப்பையில் வைத்து கட்டி அதற்கு 8,9 என கறுப்பு பெயிண்டால் வரிசை எண் கொடுக்கப்பட்டது. 1 முதல் 10 வரையிலான சந்தன மரம் அடங்கிய முட்டைகளை அதற்குரிய மகசர் தயார் செய்து அரசு தரப்பு சாட்சிகள் கையொப்பம் செய்து மனோகரன் வனக்காப்பாளர் எச்-படிவம் 040425 என்ற எண்ணில் பதிவு செய்தார்.சுமார் 6.30 மணிக்கு மாணிக்கம் வனவர் எதிரியிடம் வாக்குமூலம் பெற்றார். வாக்குமூலத்தில் அரசு தரப்பு சாட்சிகளாக நாங்கள் கையொப்பம் செய்தோம். பிடிபட்ட எதிரியையும், கைப்பற்றிய பொருட்களையும் மாலை 7 மணிக்கு வாணியம்பாடியிலிருந்து புறப்பட்டு திருப்பத்தூர் வனச்சரக அலுவலகத்திற்கு 8 மணியளவில் வந்து சேர்ந்தோம். திருப்பத்தூர் வனச்சரக அலுவலர் அவர்களின் சந்தனமர வழக்கு எண் 51/98 பெறப்பட்டு சொத்து விவரப்பட்டியல் எம்.தங்கவேல் வனக்காப்பாளர் 1 முதல் 10 மூட்டைகளை எடைபோட்டு எடை 327 கிலோ 1கிலோவின் மதிப்பு 450 ஆகும். 327-கிலோ சந்தனக்கட்டைகளின் மதிப்பு 1,47,150/-ஆகும் சொத்து விவரப்பட்டியலில் 1 முதல் 10 மூட்டைகளின் மீது கறுப்பு பெயிண்டினால் எஸ்.டி.ஓ.ஆர். எண் 51/98 என்று பதிவு செய்து முட்டைகளுக்கு வரிசை எண் கொடுக்கப்பட்டு சொத்து விவரப்பட்டியலில் தாக்கல் செய்தார். பிடிபட்ட எதிரியையும் பொருட்களையும் அங்கீகாரம்பெற்ற மாவட்ட வன அலுவலர் திருப்பத்தூர் வட்டம் மற்றும் உதவி வனபாதுகாவலர், அவர்கள் முன்பு ஆஜர் செய்து பிடிபட்ட பொருட்களையும் எதிரியையும் ஆஜார் செய்து மாவட்ட வன அலுவலரின் சி.பி. குற்ற பதிவேடு 121 பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது. எதிரியையும் பிடிபட்ட பொருட்களை பாதுகாப்பிற்காக 18.4.98 அன்று வனச்சரக அலுவலகத்தில் வைக்கப்பட்டு அன்றையதினமே நீதிமன்றத்தில ஆஜர் செய்யப்பட்டு காப்புகாவலில் இருக்கும்வரை உடன் வைக்கப்பட்டது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

வனச்சரக அலுவலர் ராஜ்மோகன் அவர்களின் தலைமையில் 9 பேர் அடங்கிய குழுவாக ஆய்வுக்கு சென்றோம். மாவட்ட வனஅலுவலர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் சென்றோம். மாவட்ட வன அலுவலர் உதவி வனபாதுகாவலர் அவர்களுக்கு சர்ச்வாரண்டுடன் கொடுக்கிறார். சர்ச்வாரண்டை யார் தயார் செய்தார் என்றால் உதவி வனபாதுகாவலர் தயார் செய்தார். சர்ச்வாரண்டில் கதவெண் மற்றும் எதிரிகளின் பெயர் மற்றும் அனைத்து விவரங்களும் உள்ளது. 9 நபர்களும் அரசு வாகனத்தில் சென்றோம். அலுவலகத்திலிருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டு 5-1/4 மணிக்கு சென்றடைந்தோம். நாங்கள் போகும்போது ஆட்கள் இருந்தார்கள் திறந்திருந்தது. சோதனைபடிவத்தை அந்த வீட்டில் உள்ள நபர்களிடம் காண்பித்தோம்



அவர்களின் பெயர் தற்போது நினைவில்லை அந்த வீட்டில் 2 பெண்களும், ஒரு ஆண் நபரும் இருந்தார்கள். எதிரிகளின் வீட்டிற்கு பக்கத்தில் நிறைய வீடுகள் இருந்தது. பக்கத்து வீட்டில் இருந்த நபர்களையும் அழைத்து விசாரித்தோம் அவர்களின் பெயர் ஞாபகமில்லை. சோதனை செய்தப்போது கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொல்லவில்லை உடன் அழைத்து செல்லவுமில்லை. பக்கத்தில் இருந்த நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தில் பக்கத்தில் இருந்த தனி நபர்களிடம் சாட்சிக்கையொப்பம் பெறவில்லை. ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள முழுவிவரங்கள் எனக்கு தெரியாது அதில் என்ன வாசகம் உள்ளது என்றும் எனக்கு தெரியாது. அதில் எத்தனை நபர்கள் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியுமா என்றால் அரசு தரப்பு சாட்சிகளும் எதிரிகளும் கையெழுத்துப் போட்டதாக கூறுகிறார். எதிரிகளின் வீட்டிற்குள் வனச்சரகர் ராஜ்மோகன், வனவர் மாணிக்கம், மனோகரன் வனக்காப்பாளர், சுந்தரமூர்த்தி வனக்காப்பாளர் ஆகியோர் சென்றனர் அந்த வீட்டில் எத்தனை அறை இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் வெளியில் இருந்தேன். வீட்டின் எந்தப்பகுதியில் இருந்து குறிப்பாக கட்டைகளை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மனோகரன் வனக்காப்பாளர், சுந்தரமூர்த்தி வனக்காப்பாளர் ஆகியோர் சணலால் ஆன கோணிப்பைமுட்டைகளை வெளியே எடுத்துப் போட்டார்கள். வீட்டிலிருந்து மொத்தம் 7 மூட்டை கைப்பற்றப்பட்டது. தனித்தனியாக எடை போடப்பட்டதா என்றால் போடப்பட்டது ஒவ்வொரு முட்டையும் எவ்வளவு எடை இருக்கும் என தற்போது என்னால் சொல்ல இயலாது. மேற்படி முட்டைகளை எங்கள் அலுவலகம் வந்துதான் எடை போட்டோம். வரிசை எண் 1 முதல் 10 வரை மனோகரன் வனக்காப்பாளர் கொடுத்தார். சணல்முட்டைகள் 10-ம் கயிற்றால் கட்டப்பட்டிருந்தது. எச் படிவத்தில் சணல் முட்டைகள் மற்றும் கயிறு காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. காரின் பின் இருக்கையில் 3 முட்டைகள் இருந்தது. அந்தக்கார்

யாருக்கு சொந்தமானது என்றும் அதன் உரிமையாளர் யார் என்றும் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் ஒருவரிடம் மட்டும் தான் வாங்கப்பட்டது யாரிடம் வாங்கப்பட்டது என்று எனக்கு அவரின் பெயர் ஞாபகமில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் எதிரியும, நாங்கள் 8 பேரும் சாட்சிக்கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாங்கிய இடத்தில் பொதுமக்கள் 10, 15 நபர்கள் இருந்திருப்பார்கள். பொதுமக்கள் யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிக்கையொப்பம் வாங்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரே தாளில் இரண்டு பக்கம் தயார் செய்தார். அதில் நான் பின்பக்கம் மட்டும்தான் கையொப்பம் செய்தேன். நான் அலுவலகம் வந்து சேரும்போது இரவு 8 மணியிருக்கும். எங்கள் அலுவலகத்தில்



சொத்து விவரப்பட்டியல் தங்கவேல் வனக்காப்பாளர் தயார் செய்தார். ரிமாண்டு அறிக்கை வனச்சரகர் தயாரித்தார் நான் சொல்வதுப்போல் சோதனைக்குசெல்லவில்லை என்றும் கட்டைகளை வைத்துக்கொண்டு வழக்கு போடவேண்டும் என்பதற்காக வீட்டில் இருந்த நபர்களை அழைத்து வந்து அவர்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல., எதிரிகளின் வீட்டிலிருந்தோ, காரிலிருந்தோ எந்த கட்டைகளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

01-02-2019 அ.சா.1

சாட்சி மனுவின் பேரில் ஆஜர் சத்தியப்பிரமாணம் பெறப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: